End Time Warriors

# பரலோக வாசல்

A monthly prayer bulletin for YOUTH & TEENS    Battle 01 - Field 09 - January 2023



# முதல் வரிகள்...

கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு அன்பின் புத்தாண்டு வாழ்த்துக்கள். ஒரு புதிய வருடத்திற்குள்ளாக நம்மை அழைத்துக் கொண்டு வந்த தேவாதி தேவனை துதிக்கிறேன். இந்த வருடத்தின் நன்மையினாலும், கிருபையினாலும், கர்த்தர் தாமே உங்களை நிரப்புவாராக.

உலகத் தோற்றத்துக்கு முன்னமே உங்களை முன்குறித்தவர்; உலகத்தின் முடிவுக்கு முன்பாக உங்களை அழைத்துக் கொண்டு செல்ல வரப்போகிறார் என்பது எத்தனை மகிழ்ச்சி. ஆனால், கைவிடப் படப்போகிற அநேகருக்கு இது ஒரு துக்கத்தின் நாள். முடிவில்லாத நித்தியத்தை தீர்மானிக்கும் நாள் என்று கூட சொல்லலாம். பரிசுத்த வேதாகமத்தில், கடைசி நாட்களில் நிறைவேறும் என்று சொல்லப்பட்ட அநேக தீர்க்கதரிசனங்கள், இந்த நாட்களில் நிறைவேறிக் கொண்டிருக்கிறதை நம்மால் பார்க்கமுடியும். இன்னும் துரிதமாய் அவரை அறிவிக்கவும், அநேக வாலிபர்களை சேனைகளாய் எழுப்பவும், கர்த்தர் விரும்புகிறார். ஆனால், தனக்கு கொஞ்ச காலம் மாத்திரமே உண்டு என்பதை அறிந்த பிசாசானவன், தீவிரமாய் அவனுடைய காரியங்களை செய்து கொண்டிருக்கிறான். இந்த நாட்களில், ஜெபிக்கிறவர்கள் கர்த்தருக்கு தேவை. ஜெபிக்கிற மனிதனையும், குழுக்களையும் கர்த்தர் தேடிக் கொண்டிருக்கிறார்.உங்களுடைய தனி ஜெபங்கள், மற்றும் குழு ஜெபங்களில் தேசத்தின் எழுப்புதலுக்காக அதிகமாக ஜெபியுங்கள்.

இந்த மாதத்திலும் வருகிற 16 மற்றும் 17 ஆம் தேதிகளில், செம்பட்டியில் வைத்து நடைபெறுகிற வருடாந்திர தரிசனக் கூடுகைக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். இயேசுவுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்று விரும்புகிறவர்களுக்கான கூடுகை இது. அநேக தரிசனமுள்ள வாலிபர்கள் மற்றும் குடும்பங்கள் கர்த்தருக்காக செயல்படுகிறவர்களாக எழும்பவும், தேவ திட்டத்தை நிறைவேற்றவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். மேலும், இந்த புதிய வருடத்தில் அநேக மாவட்டங்கள், மற்றும் மாநிலங்களுக்குள்ளாக செல்ல திட்டமிட்டிருக்கிறோம். உங்கள் ஜெபங்களில் எங்களை அதிகமாக நினைத்துக் கொள்ளுங்கள்.

*தேவ கிருபை உங்களோடிருப்பதாக...*

யுத்த களத்தில் உங்களோடு

**- R. சாலமோன்**

## கர்த்தராகிய **இயேசு** கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்கள்...




வாழ்க்கை என்ற பயணம் ஏற்றத் தாழ்வுகளை உள்ளடக்கியது. சில வேளைகளில் எதிர்கொள்ளக் கூடிய எளிய சூழ்நிலைகளும், கடினமான சவால்களும், நம்முடைய பயணம் எப்படிப்பட்ட தென்பதை நமக்கு அறிவுறுத்திக் கொண்டே இருக்கிறது. ஆனால் பரிசுத்த வேதாகமம் நமக்கு கற்றுத்தருவதோவென்றால், சூழ்நிலைகள் எப்படிப்பட்டதாக இருந்தாலும், கர்த்தர் உங்களோடு கூட இருந்தால், அவைகளை நீங்கள் தாண்டிப் போவீர்கள். சங்.18.29-ல் தாவீது இவ்வாறாக எழுதுகிறார், **"உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்".** தாவீதை பொறுத்தவரையில், பிரச்சனைகள் எப்படிப் பட்டதாக இருந்தாலும், என் தேவனாலே அவைகளை தாண்டுவேன் என்ற விசுவாசம் அவருக்குள் அதிகமாக இருந்தது. ஒரு சமயம் தாவீதும், அவரோடிருந்தவர்களும், தாங்கள் தங்கியிருந்த சிக்லாகு என்ற இடத்திற்கு, தங்களுடைய யுத்தத்தை முடித்து கொண்டு வரும் போது, அமலேக்கியர்கள் அந்த பட்டணத்தை கொள்ளையடித்து, அக்கினியால் சுட்டெரித்து, பெண்கள் மற்றும் குழந்தைகளை சிறைபிடித்து கொண்டு சென்று விட்டனர் (1சாமு.30:1,3). இதை கண்ட தாவீதும், அவரோடிருந்தவர்களும் அழுகிறதற்கு தங்களில் பெலனில்லாமல் போகுமட்டும் சத்தமிட்டு அழுதார்கள் (1சாமு.30:4). தாவீது இந்த ஜனங்களை வழிநடத்தினபடியால், இந்த சம்பவத்தின் நிமித்தம் மிகவும் நெருக்கப்பட்டார். எல்லாருடைய பார்வையும் இப்பொழுது தாவீதுக்கு மேலே சென்றது. தாவீது தான் அணைத்து பிரச்சனைகளுக்கும் காரணம் என்பது போல் ஒரு சூழ்நிலை உருவானது. வேதம் சொல்கிறது 1சாமு.30:6-ல், தாவீதை கல்லெறிய வேண்டும் என்று சொல்லிக் கொண்டார்கள். இந்த சூழ்நிலையில் ஒருவேளை நாம் இருந்திருந்தால் என்ன செய்திருப்போம், எல்லாமே முடிந்ததென்று நினைத்து உடைந்து போய், சோர்ந்து போயிருப்போம். ஆனால், தாவீதோ சற்று வித்தியாசமாக, கர்த்தரை நோக்கி விண்ணப்பம் செய்து, 1சாமு.30:8ல், சொல்லுகிறபடி கர்த்தரிடத்தில் தான் என்ன செய்ய வேண்டும் என்று விசாரித்து, கர்த்தருடைய வார்த்தையின் படியே செய்து, தனக்கு முன் இருந்த கடினமான சூழ்நிலையை, தனக்கு சாதகமாக மாற்றிகொண்டார். எனவே தான் தாவீது சொல்கிறார்,

**"உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்".**

இதை வாசித்துக்கொண்டிருக்கிற அன்பு தம்பி, தங்கச்சி, பாவம் என்கிற மதிலை தாண்ட முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறாயா, அல்லது உன்னுடைய எதிர்காலத்தை நினைத்து கலங்கிக் கொண்டிருக்கிறாயா! இன்றைக்கு கர்த்தர் உன்னோடு பேசிக் கொண்டிருக்கிறார். நீ அவரோடும், அவர் உன்னோடும் இருக்கும் போது, உனக்கு முன் இருக்கும் மதிலை நீ தாண்ட முடியும். ஒரே ஒரு காரியம் தான், அவருக்கும், உனக்கும் இருக்கிற உறவு எப்படி இருக்கிறது. அனுதின வேத வாசிப்பு மற்றும் ஜெப வாழ்க்கை எப்படி இருக்கிறது. இவைகளை நீ சீர்படுத்தும் போது, உனக்கு முன் இருக்கும் மதில் போன்ற பிரச்சனைகளோ, அல்லது சவால்களோ ஒரு பொருட்டல்ல. அன்றைக்கு தாவீது சொன்னது போல, நீயும் சொல்ல வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். ஜெபிப்போமா...

**அன்பின் பிதாவே,** என்னுடைய வாழ்க்கையில் பாதையில் நான் எதிர்கொண்ட ஒவ்வொரு சவால்களிலும் நீர் இன்றி தோற்றுப்போய், அந்தபாதையை தாண்ட முடியாமல், நான் சந்தித்த பிரச்சனைகள் போதும். இன்றிலிருந்து உம்மை நம்பி, என் கண் முன் நிறுத்தி, அன்று தாவீது சொன்னது போல் நானும் சொல்லுகிறேன், உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்து போவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன். என் ஜெபத்தை நீர் கேட்டதற்காய் நன்றி. என் கரத்தை நீர் பிடித்திருக்கிறதற்காய் நன்றி. இயேசுவின் மூலம் ஜெபிக்கிறோம் பிதாவே ஆமென்.

# ஜெபியுங்கள்



## 1ம் வார

### ஜெபக்குறிப்புகள்...

நம் இந்திய தேசத்தில் உள்ள இரட்சிக்கப்படாத வாலிபர்கள் அநேகர் திரள்திரளாய் இரட்சிக்கப்படும்படியாய் ஜெபிப்போம்.

விபத்துக்களினால் அனுதினமும் அநேகருடைய ஜீவனை பிசாசானவன் கொள்ளையாடுகிறதை செய்திகளின் வாயிலாக அறிகிற நாம் அப்படிப்பட்ட மரணங்கள் நடைபெறாதவாறு ஜெபிப்போம்.

புதிய ஆண்டில் அநேக வாலிபர்கள் தரிசனங்களை பெற்று தேவ இராஜ்யத்தை கட்ட எழும்பும்படியாய் ஜெபிப்போம்.

திருச்சபைகளுக்குள் புதிய ஆண்டில் பெரிய சுத்திகரிப்பை கர்த்தர் கட்டளையிடும் படியாய் ஜெபிப்போம்.

## 2ம் வார

### ஜெபக்குறிப்புகள்...

மூட பழக்கவழக்கங்களுக்கு அடிமைப்பட்டுள்ள நம் ஜனங்களின் கண்கள் திறக்கப்பட, அடிமைத் தனங்களில் இருந்து வெளிவர ஜெபிப்போம்.

நம் இந்திய தேசத்தின் குடியரசுத் தலைவர், பிரதமர், போன்ற தலைவர்களுக்காய் ஜெபிப்போம்.

மதுப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கக்கூடிய நம் தேசத்தின் ஜனங்கள் மீட்கப்பட ஜெபிப்போம்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குற்றங்களில் ஈடுபடுவோர் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

## 3ம் வார

### ஜெபக்குறிப்புகள்...

ஆபாச வலைத்தளங்களை பயம்படுத்துவோர் அந்த அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட ஜெபிப்போம்.

சிறு குழந்தைகளுக்கு விரோதமான பாலியியல் குற்றங்கள் தடுக்கப்பட, அப்படிப்பட்ட பொல்லாத செயல்களில் ஈடுபடுவோர் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

பண ஆசையினால் தவறான பாதைகளை தேர்வு செய்யும் வாலிபர்கள் சரியான பாதைக்கு திருப்பப்பட ஜெபிப்போம்.

நம் இந்திய தேசம் இயேசுவை அறிந்துகொள்ளமுடியதபடி தடைசெய்கிற மனுஷிக வல்லமைகள் முறியடிக்கப்பட ஜெபிப்போம்.

## 4ம் வார

### ஜெபக்குறிப்புகள்...

சுத்த சுவிசேஷத்தை நம் தேசமெங்கும் எடுத்து செல்லுகிற சுவிசேஷகர்கள் அநேகர் எழும்ப ஜெபிப்போம்.

நூதனமான உபதேசங்களினால் விசுவாசிகள் வஞ்சிக்கப் பட்டுவிடாதபடி தங்கள் ஆத்துமாக்களை பாதுகாத்துக் கொள்ளும்படியாய் ஜெபிப்போம்.

வறுமையின் கோர பிடியில் சிக்கி உள்ள நம் ஜனங்களின் வாழ்வாதாரம் உயர ஜெபிப்போம்.

தோல்வி, விரக்தி, மன அழுத்தம் காரணமாக தற்கொலைக்கு நேராக செல்லக்கூடிய மனிதர்கள் சந்திக்கப்பட அவர்கள் கர்த்தருக்கு நேராக திருப்பப்பட ஜெபிப்போம்.



## 5ம் வார

### ஜெபக்குறிப்புகள்...



போதை வஸ்துக்களுக்கு அடிமைப்பட்டுள்ள பள்ளி மாணவர்கள் மீட்கப்பட ஜெபிப்போம்.

நம் மாநிலத்தின் முதலமைச்சர், ஆளுநர்,அமைச்சர்களுக்காக ஜெபிப்போம்.

நாம் சார்ந்திருக்கக்கூடிய பள்ளி, கல்லூரி மற்றும் திருச்சபைகளில் இருக்கக்கூடிய வாலிபர்களுக்காய் ஜெபிப்போம்.

தீவிரவாத இயக்கங்கள், அதன் தலைவர்கள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.



# TRUE SOLDIER

சர்வ வல்லமையுள்ள தேவனுடைய யுத்த சேனையாகிய இராணுத்தில் இணைந்து, இருளின் இராஜ்ஜியத்திற்கு எதிராகப் போராடி ஒளியின் இராஜ்ஜியத்தை விரிவாக்க விரும்புகிற ஒவ்வொரு போர்ச்சேவகர்களுக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

**ஒவ்வொரு மாதமும் கர்த்தர் நம்மை ஒரு உண்மையுள்ள போர்ச்சேவர்களாக உருவாக்கி வருகிறார்.** இப்பொழுது நாம் கற்றுக்கொள்ளப் போகும் ஒரு போர்ச்சேவகனுக்குரிய ஆயத்தம், "A True Soldier should stand in the gap for the souls". "ஒரு போர்ச்சேவகன் தன் ஜனங்களுக்காக திறப்பில் நிற்கிறவனாக இருக்க வேண்டும்". சாத்தானோடு யுத்தம்பண்ணி அவன் பிடியிலிருக்கும் ஜனங்களை விடுவிக்கிற ஒரு சிறந்த போர்ச்சேவகனாக காணப்படவேண்டும். எசேக்கியேல் 22:30-ல் "நான் தேசத்தை அழிக்காதபடிக்கு திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன் ஒருவனையும் காணேன்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. சுவரை அடைக்கவும் திறப்பிலே நிற்கவும் தெரிந்தெடுக்கப்பட்ட யுத்த வீரர்களை கர்த்தர் இன்றைக்கும் தேடுகிறார். திட்டம் உள்ள, தரிசனம் கொண்ட, திறப்பில் நிற்கும் எந்தவொரு போர்ச்சேவகனிடமும் கர்த்தர் எதையும் மறைப்பதில்லை. அப்படிப்பட்ட ஒருவனைத் தேடி "மம்ரே" என்னும் சம பூமியில் தரிசனமாகி தரிசன புருஷனாகிய ஆபிரகாமை கர்த்தர் சந்தித்தார். ஆதியாகமம் 18:18,20,22...33 ஆகிய வசனங்களில் "நான் செய்யப்போவதை உனக்கு மறைப்பேனோ" என்று ஆபிரகாமிடம் சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருப்பதாலும், பாவம் கொடியதாயிருப்பதாலும் அதை விசாரிக்கச் செல்வேன் கர்த்தர் கூறுகிறார். ஆனால் ஆபிரகாமோ பின்னும் கர்த்தருக்கு முன்பாக நின்று கொண்டிருந்தான் என்று சொல்லப்படுகிறது. கர்த்தரிடம், ஆபிரகாம், "துன்மார்க்கனோடு நீதிமானையும் அழிப்பீரோ? துன்மார்க்கனோடு நீதிமானை சங்கரிப்பது உமக்கு தூரமாவதாக. ஐம்பது நீதிமான்கள் காணப்பட்டால், நாற்பது, பத்து நீதிமான்கள் காணப்பட்டால் அழிப்பீரோ? பாதுகாப்பீரோ?" என்று ஜெபம் பண்ணுகிற ஒரு ஜெப வீரனாக இருக்கின்றான். அழிந்து போகப்போகிற ஜனங்களுக்காக பரிதபிக்கக் கூடியவனாக திறப்பிலே நிற்கிறான்.

யாத்.32:22-ல் தன் சொந்த ஜனங்களுக்காக "அவர்களை மன்னித்தருளும் இல்லாவிட்டால் என் பெயரை உம்முடைய புத்தகத்திலிருந்து கிறுக்கிப்போடும்" என்று தன் பரலோகக் குடியுரிமையை பணையம் வைத்து, திறப்பிலே நிற்கிறான் மோசே. தன் யூத குலத்திற்கு வரும் பேரழிவைத் தாங்க முடியாமல், உபவாசித்து "செத்தாலும் சாகிறேன்" என்று தன் ஜீவனையும் பணையம் வைத்து, ராஜா முன்பாக நிற்கிறாள் எஸ்தர்.

**ஆபிரகாம்.... மோசே.... எஸ்தர்...**

*இந்த வரிசையில் நீயும் இடம் பிடிக்க ஆயத்தமா?*

**யுத்த சேனையே திறப்பிலே நிற்க எழும்பிவா!...**

**இராக்காலம் வரும் முன் கிரியை செய்திட எழும்பிவா!...**

**சேனையே எழும்பி வா!...**

- Daisy Solomon



# Living Sacrifice!

Therefore, I urge you, brothers and sisters, in view of God's mercy, to offer your bodies as a **living sacrifice**, holy and pleasing to God—this is your true and **proper worship.**
– Romans 12:1

**What exactly do you mean by "Living Sacrifice"?** It may appear to be an oxymoron! It may sound weird, but it is practical. Sacrifice entails killing something and offering it to God. Living Sacrifice means that we live for God while being crucified for this world, as expressed in the New Living Translation of Galatians 6:14, *"As for me, may I never boast about anything except the cross of our Lord Jesus Christ. Because of that cross, my interest in this world has been crucified, and the world's interest in me has also died."* In our own lives, we begin to fight against evil and against ourselves. As we strive for holiness, we begin to deny ourselves/our flesh/our desires/our plans and submit them to God's will.

We would be more bothered about what pleases God rather worried about the things of this world. We surrender and align our spirit with His spirit. The bible says beautifully in Galatians 2.20, *"I have been crucified with Christ and I no longer live, but Christ lives in me. The life I now live in the body, I live by faith in the Son of God, who loved me and gave himself for me."* Eventually, we live for the One who gave His life on the cross for us. Worship is not limited to a few minutes in some meetings. It has a deeper meaning and a higher purpose! A true worshipper lives a life that pleases God in everything he does. I absolutely love the name Obed, which was given to the son of Boaz and Ruth! Do you know why? The name Obed means "Worshipper!" in Hebrew.

Also, beware of this scripture of Matthew 15:7-9: "You hypocrites! Well did Isaiah prophesy of you, when he said: *"This people honors me with their lips, but their heart is far from me; in vain do they worship me, teaching as doctrines the commandments of men."* When you give your life to the One who created you, it must be done in a way that is holy and pleasing (acceptable) to Him. I recall one of Don Moen's choruses that goes like this: *"You bring your sacrifices, And you offer up your praise, You lift your voice with singing, But your heart seems far away, More than a sacrifice, I am looking for your lifeHoly and acceptableAnd pleasing in my (God's) sight."* Let us surrender ourselves as a living and acceptable sacrifice!

***Join me in this small prayer:***

Dear Heavenly Father! We honour and exalt you! Enable us in worshipping you in an acceptable and holy manner. Help us to offer ourselves as a living sacrifice in order to honour God through our actions. Let us worship you in spirit and truth. In Jesus' name, we pray. Amen!

***Here is the promising verse:***

**Psalm 71:23 ESV : "My lips will shout for joy, when I sing praises to you; my soul also, which you have redeemed"**

- Manoj Kumar

# கிறிஸ்துவின் போர்ச்சேவகர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!!!



## Anne Askew

இந்த மாதத்திலும் ஒரு **இரத்தசாட்சி** குறித்து பார்ப்போம்!



1521 - 1546

1521 ஆம் ஆண்டு England-ன் Lincolnshire-ல் ஒரு பணக்கார குடும்பத்தில் William Askew மற்றும் Elizabeth-ற்கு 4வது குழந்தையாக பிறக்கிறாள் Anne Askew. சிறு வயதில் இருந்தே வேத ஞானமும், வேதத்தின் மீது அளவுக்கடந்த ஆவலும் கொண்டவள். அந்த அன்பினாலே என்னவோ, அவளால் அமைதியாக இருக்கவே முடியாது! யாரிடமாவது இயேசு கிறிஸ்துவைக் குறித்து பேசிக்கொண்டே இருப்பாள். வசனங்களை மனப்பாடம் செய்வாள். நாளுக்கு நாள் வேத வார்த்தைகள் அவளை உருவாக்க ஆரம்பித்தது.

Anne-க்கு 15 வயது ஆகும்போது அவளுடைய மூத்த சகோதரி Martha-க்கு Kyme என்ற நில உரிமையாளருடன் திருமணம் ஒழுங்கு செய்யப்பட்டது. ஆனால் அந்த சமயத்தில் Martha இறக்கவே, Anne-யை அந்த மகனுக்கு திருமணம் செய்து வைத்தனர். ஆனால் அந்த உறவு சந்தோஷமாக அமையவில்லை. அந்த Kyme-க்கு வேதத்தின் மீது நம்பிக்கை இல்லாததால் இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு அதிகரிக்க, Anne வீட்டை விட்டு வெளியேற்றப்பட்டாள். மீண்டும் அவள் London வந்து வேத வார்த்தைகளை பிரசங்கம் செய்ய ஆரம்பித்தாள். ஆதலால், அவளுடைய கணவனால் 1545-ல் கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்டாள். ஆனால், சில நாட்களில் தப்பித்து மீண்டும் பிரசங்கம் பண்ணினாள். மீண்டும் கைது செய்யப்பட்டாள். மூன்றாவது முறையாக அவளை London Tower-ல் வைத்து கைது செய்யப்பட்டு கொடுமைப்படுத்த அழைத்து செல்லப்பட்டாள். அங்கு Rack என்ற கருவியின் மூலம் அவளை துன்புறுத்த கொண்டு சென்றனர். அவளுடைய இரு கரங்களும், கால்களும் நான்கு முனைகளில் கட்டப்பட்டு சதைகள் பிக்கப்பட்டன. அந்த கருவி அவளுடைய உடலின் பின்பகுதி முழுவதையும் சிதைத்தன. அவளுடைய எலும்புகள் முழுவதும் நகர ஆரம்பித்தது, அவளால் எழும்ப முடியாமல் துடி துடித்து விழுந்தாள். அவளுடைய அழுகுறல் White Tower முழுவதும் எதிரொலித்தது. தொடர்ந்து அந்த Rack மூலம் துன்புறித்தி அவளுடைய விசுவாசத்தை இழக்க வற்புறுத்தினர். சிறையில் இருந்த காவலாளி கூட அவள் படுகிற வேதனையைப் பார்க்க முடியாமல் வெளியே சென்றான். ஆனால் அவளோ, துளியும் கர்த்தர் மேல் வைத்த அன்பை இழக்கவில்லை. இறுதியாக 1546-ல் அவளை உயிரோடு எரிக்க முடிவு செய்தனர்.

அவள் இருந்த நாற்காலியோடு வெளியே கொண்டு வந்து உயிரோடு எரித்து கொல்லப்பட்டாள் Anne Askew.

வேதத்தை அறிந்ததாலும், உண்மையான சுவிசேஷத்தை அறிவித்ததாலும், தன்னுடைய 25 வயதில் முதல் வாலிப பெண் இரத்த சாட்சியாக கர்த்தருடைய நாமத்தை தன் மரணத்தின் மூலமாக மகிமைப்படுத்தினாள். இதை பார்த்த அநேக ஜனங்கள் கர்த்தரின் நாமத்திற்காக நிற்க ஒப்புக்கொடுத்தனர், கர்த்தருடைய வார்த்தையும் பெருக ஆரம்பித்தது.

**ஒரே ஒரு விதை தான்!**
**ஆயிரம் கனிகளை விளையச்செய்தது!**
**நாமும் அந்த ஒரு விதையாக மாறுவோம்!!!**

- Priya



# Go Ahead...

**அன்பு வாலிப தம்பி, தங்கச்சி! எல்லாரும் சந்தோஷமா இருக்கிங்களா?** நம்ம எல்லாருக்கும் adventures னா ரொம்ப பிடிக்கும் அப்படிதான. இதே மாதிரி தான் John என்ற ஒரு வாலிப அண்ணன் இருந்தாங்க, அவங்களுக்கு forest officer ஆகனும், animals கூட விளையாடனும், adventures பண்ணனும் என்று பெரிய ஆசை இருந்தது. அதற்காக அந்த அண்ணன் கஷ்டப்பட்டு படித்து பரிட்சையில் தேர்ச்சி பெற்றாங்க. அவங்களுக்கு physical training ஆரம்பித்தது, அப்போ ஒரு நாள் அவங்க trainer இந்த John அண்ணன்னா மலை உச்சிக்கு அழைத்து சென்றாங்க, அங்க சில காரியங்களை கற்றுக் கொடுத்த பின் John அண்ணன்னா அடுத்த மலைக்கு தாண்டி போக சொன்னாங்க, but அங்க ஒரு bridge, staircase எதுவும் இல்லை. John அண்ணனுக்கு ரொம்ப பயம் என்ன பண்றது னு தெரியல. என்ன தம்பி தங்கச்சி உங்க வாழ்க்கையை திரும்பி பார்த்த மாதிரி இருக்குதா? இதே போல தான் நாமும் பாவம் என்கிற வனாந்தரத்தில் சுற்றித் திரிந்தோம் இயேசப்பா ஒரு parachute ஆ வந்து நம்மை மலையின் மேல் ஏற்றி அமரச் செய்தாங்க இப்போ இன்னொரு மலைக்கு நம்மை தாண்ட சொல்றாங்க, ஆனா எப்படி செல்வது என்று தெரியாம கலங்கி நிற்கிறோம் அப்படிதான?? அப்படி தான் இந்த John அண்ணனும் நின்னாங்க எல்லாரும் "John! Go ahead, Go ahead" னு சொன்னாங்க ஆனா யாரும் வழி இது தான் என்று காட்டி கொடுக்கவில்லை. இன்று நம்மையும், சில பாடுகளும், பாரமும் நெருக்கி கொண்டு இருக்கிறது, இதை தாண்ட முடியல னு நினைக்கிறோம்?? இன்று ஆவியானவர் ஒரு இரகசியத்தை நமக்கு சொல்றாங்க, "இயேசு கிறிஸ்து தான் அந்த ஜீவ பாதை". இயேசு என்கிற rope ஐ பிடித்து தடைகளை தாண்டுவோம். ஆமேன்!

**- Blessy**

# OVERCOMERS........

I walked through the darkest valley
I cried out in the daytime
My enemies chased me after I got anointed
My woes stole my wife, my children and all I possessed
I cried with a bitter cry
Then I strengthened myself in the lord
I know that the lord is always with me
The lord restored, all I lost
Once I sinned with a woman
It continued with a murder
The moment, when the lord made me realize my sin
I fell in his feet, and turned from my sins
I am a man after his own heart
I am king David
If I can! You too can overcome!!



**- Jenifer**

# எழுப்புதல் நட்சத்திரம்



**எழுப்புதல் தாமதிக்கிறது... ஏனெனில் ஜெபம் தேய்கிறது...**

ஒவ்வொரு எழுப்புதல் வீரனும் அசாதாரணமான ஜெப வீரர்களாய் அவர்கள் நின்றதினாலேயே அவர்கள் ஜெபமும் அசாதாரணமாக பதில்களைக் கொண்டு வந்தது.

FInny நாட்களில் வந்த ஒரு எழுப்புதலைப் போலவே இன்னொரு எழுப்புதல் இந்தியாவிலுள்ள நாகாலாந்து என்னும் பகுதியில் நடந்து கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டு, அங்கே இருக்கும் நிலைவரத்தை அறிய விரைகிறார் பால் கோஃப்மன்.அங்கே அவர்கள் கண்ட பெரிய அற்புதங்களும் அடையாளங்களும் அவர்களை வியக்கச் செய்தது.

குருடர்கள் பார்வையடைகிறதையும், முடவர்கள் நடக்கிறதையும், அநேகர் பாவத்திலிருந்து மனந்திரும்புகிறதையும் கண்டு ஆச்சரியப்பட்டு, இதெல்லாம் எப்படி சாத்தியமானது? என்பதை அறிய அந்த அரசாங்கம் ஒரு விசாரணைக் குழுவை அனுப்பியது.

மது கடைகளெல்லாம் மூடப்பட்டுவிட்டதா? தெருவில் கெட்ட வார்த்தை பேசி சண்டை போட்ட சிறுவர்கள் இப்பொழுது பள்ளிக்கு ஒழுங்காகப் போகிறார்களா? எந்த சட்டத்திற்கும் அதிகாரத்திற்கும் கீழ்ப்படிந்து போகாத இந்த மக்களுக்குள் பேரமைதி, சமாதானம் நிம்மதியா?

இதற்கு யார் காரணம்? இது எப்படி நடந்தது? என்று விசாரணைக் குழுவின் விசாரிப்பின் முடிவில்தான் தெரியவந்தது "ஒரு சிறிய குழு கிட்டத்தட்ட 20 வருடங்களாக நாகாலாந்தின் எழுப்புதலுக்காக தேவனோடு போராடிக் கொண்டிருந்தது" இப்படிப்பட்ட தொடர் போராட்ட ஜெபம் இருக்குமாயின் எழுப்புதல் எப்படி வராமல் இருக்கும்? அவர்களின் ஜெபம் அன்று நாகாலாந்தை அசைத்ததுபோல, உன் ஜெபம் உன் பட்டணத்தை அசைக்க வேண்டும்.

*நீயும் ஆயத்தமா?*

**எழுப்புதல் நட்சத்திரமாக...**

# கடைசிக்கால யுத்தசேனை ஊழியங்கள்



இந்த தரிசனம் தோன்றிய வருடம் 2016-ம் ஆண்டு. மூன்று நாள் தொடர் உபவாச ஜெபத்தின் போது கர்த்தர் வெளிப்படுத்தி கொடுத்த தரிசனம். "திரளான குடும்பங்களை, திரளான வாலிபர்களை நான் உங்களுக்கு எழுப்பித் தருவேன்" என்று கர்த்தர் வாக்கு கொடுத்திருக்கிறார்.

1 நாளாகமம் 12:22-ல் சொல்லப்பட்ட வார்த்தையின்படி "அவர்கள் தேவ சேனையைப் போல் மகா சேனையானார்கள்". என்ற வார்த்தை மூலமாய் பேசி, 1 கோடி வாலிபர்களை கர்த்தருக்கென்று சேனைகளாய் எழுப்பும் உன்னத தரிசனத்திற்கு என்று அழைத்து பயன்படுத்தி வருகிறார்.

கர்த்தர் தந்தருளின திறந்த வாசலாலே, திருச்சபைக்குள், அநேகம் பள்ளி, கல்லூரிகளில், வேலை ஸ்தலங்களில் அநேக வாலிபர்களை சந்திக்கவும், அவர்களை கர்த்தருக்கென்று சேனைகளாய் எழுப்பவும் கர்த்தர் கிருபை பாராட்டினார். வாலிபர்கள் எழும்ப ஜெபத்தில் தாங்குகிற அநேக மொர்தகாய் குடும்பங்களை கர்த்தர் மாவட்டந்தோறும் எழுப்பி வருகிறார்.

அநேக கிராமங்களில் சுவிசேஷ ஊழியம், மாவட்ட, மாநிலங்களை சுதந்தரிக்கும்படி ஜெப நடைகளை செய்யவும் கிருபை செய்கிறார். ஜெப குழுக்களை எழுப்பி, கிதியோனியர் பயிற்சி கொடுக்க செய்தார்.

மாவட்டந்தோறும் வாலிப ஐக்கிய கூடுகைகள், வாலிப, குடும்ப ஜெபக்குழுக்கள், பத்திரிக்கை மற்றும் Zoom மூலமாக அநேக வாலிபர்கள் சந்திக்கப்படவும் கர்த்தர் தயவு பாராட்டியிருக்கிறார்.

இந்த தரிசனத்தின் மூலம் சந்திக்கப்படுகின்ற வாலிபர்கள் இரட்சிக்கப்படுகிறதோடு மட்டுமல்ல, போர்ச்சேவகர்களாய் எழும்புவதே இந்த தரிசனத்தின் நோக்கம்.

**நீங்களும் இந்த அலங்கம் கட்டும் பணியில் உங்கள் கரங்களை எங்களுடன் கோர்த்துக் கொள்ளுங்கள்.**

**ஜெபிப்போம்! சுதந்தரிப்போம்!**

# எனது சாட்சி!

நான் திருநெல்வேலி மாவட்டம் சுத்தமல்லி கிராமத்தில் உள்ள இந்து குடும்பத்தில் வளர்ந்து வந்தேன். என்னுடைய அப்பா வேலை பார்த்துக் கொண்டே பக்கத்தில் உள்ள கோவிலில் பூஜை செய்து வந்தார். என் பெற்றோர்க்கு நான் ஒரே பிள்ளை ஆதலால் என்னிடம் அதிகமான அன்பும் பாசமும் வைத்து வந்தனர். நான் வெளி உலகத்தின் காரியங்களில் முதலிலும் படிப்பில் மந்தமாகவும் இருப்பவள். பின்பு 10 ஆண்டுகள் கழித்து எனக்குச் சகோதரன் பிறந்தான். அவன் பிறந்த பின்பு என் பெற்றோர் கவனம் அவன் பக்கம் திரும்பியது. இதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தனிமையை உணர்ந்தேன், என்னை யாருக்கும் பிடிக்காது என்று நினைத்து கொண்டு வந்தேன்.

ஒருநாள் என்னுடைய பள்ளியில் உள்ள ஆசிரியர் ஒருவர் மூலம் இயேசு கிறிஸ்துவைபற்றி அறிந்துகொள்ள வாய்ப்பு கிட்டியது. அதற்கு முன்பே ஞாயிறு பள்ளியில் கதைகள் கேட்டிருந்தாலும் இவர்கள் பேசும்போது ஏதோ உள்ளத்தில் பேசியது. அவர் "ஜனங்களை இரட்சிப்பதற்காக சிலுவையில் அறையப்பட்டார் என்றும் யாரும் நம்மை நேசிக்கவில்லை என்றாலும் அவர் நம்மை நேசிப்பார்" என்றதும் அவரை என் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டேன். அன்றிலிருந்து கிறிஸ்தவர்களை என் வாழ்க்கையில் சந்திக்கும் போதெல்லாம் இயேசு கிறிஸ்துவைபற்றி சொல்லுமாறு கேட்பேன்.

இது என் பெற்றோர்க்கு தெரியவந்தது, ஆனாலும் அவர்கள் அதைக்குறித்து பெரிதாக எண்ணவில்லை. இப்படியாக நான் ஜெபிப்பதிலும் வேதவாசிப்பிலும் அதிகமாக கவனம் செலுத்த ஆரம்பித்தேன். அப்போது ஒருநாள் காய்ச்சல் நிமித்தம் என்னுடைய இடதுகாலில் வீக்கம் உண்டாயிற்று. நாளடைவில் நான் நடப்பதற்கு கூட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டேன். பின்பு தான் தெரியவந்தது ஆஸ்டியோமைலட்டீஸினால் பாதிக்கப்பட்டேன் என்று. இந்தக் கிருமி அதிகமாக எலும்புகளைப் பாதித்துள்ளதால் காலை எடுக்க வேண்டும் என்று மருத்துவர் கூறினார். இந்தச் சூழ்நிலையில் என் உற்றார் உறவினர்களும் பெற்றோரும் என்னைக்குற்றச்சாட்டுகிறதோடு மட்டுமில்லாமல் கிறிஸ்தவத்தை விட்டுவிடுமாறு திட்ட ஆரம்பித்தார்கள்.

ஒருநாள் நான் என் பள்ளிக்குச் சென்று வந்த பிறகு கிறிஸ்தவ வேதாகமத்தை வாசிக்க ஆரம்பித்தேன். அதில் உள்ள ஒரு வசனம் என்னோடு ஆழமாகப் பேசியது" என் கால்களை மான் கால்களைப்போலாக்கி உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப் பண்ணுவார்". இந்த வார்த்தை கர்த்தரின் மேல் விசுவாசம் வைக்குமாறு உந்தித் தள்ளியது. பின்பதாக காலில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு நான்கு மாதங்களில் நடக்க ஆரம்பித்தேன். கர்த்தர் சொன்ன வாக்கை எனக்கு நிறைவேற்றிக் கொடுத்ததுமின்றி நல்ல கல்லூரியில் பயில இடம் கிடைக்கச் செய்தார். பின்பு உயர் கல்வி பல்கலைக்கழகத்தில் படிப்பதற்கான வாசலையும் திறந்து கொடுத்தார். இரண்டு பட்டப்படிப்பிலும் நல்ல மதிப்பெண் எடுக்கவும் இன்னும் பரிசுத்தமாக இருக்கவும் கர்த்தர் கிருபை கொடுத்தார். படித்து முடித்தபின் பெங்களூரில் உள்ள உயர்ந்த அலுவலகத்தில் வேலைக் கிடைத்தது.

புதிய பட்டணம், மொழி தெரியாத இடம் என்றாலும் கர்த்தர் என்னைக் கரம்பிடித்து நடத்துகிறதை நான் உணர்ந்தேன். என்னுடன் பணி செய்பவர்கள் அநேகர் குடிப்பழக்கத்திலும் தவறான தொடர்பிலும் அநாகரிகமான பேச்சு உடை நடை போன்றவற்றில் இருந்தாலும் நாளுக்குநாள் நான் பரிசுத்தத்தில் வளர ஆரம்பித்தேன். இதின் நிமித்தம் நான்எல்லாரிடமும் ஒன்றுபடாமல் இருபதால் பல இன்னலுக்குள் ஆக்கப்பட்டேன். எனக்கு மேல் இருக்கும் அதிகாரிகள் எனக்குக் கடினமான வேலைகளைக் கொடுத்தனர், தனிமைப் படுத்தப்பட்டேன், செய்யாத தவறுக்கு பழி சுமத்தப்பட்டேன், பணியிலிருந்து வெளியேறுமாறு வற்புறுத்தபட்டேன். பின்பு என் சொந்த ஊருக்குத் திரும்பிச் சென்றேன். நான் கடந்து வந்த வேதனைகள், கஷ்டங்கள் அதிகமதிகமாக என்னைப் பாதித்தது. இரண்டு வாரத்திற்குள் சென்னையிலிருந்து வேலைக்கான அழைப்பு வந்தது, நான் ஜெபித்து அந்தப் பகுதிக்கு வேலைக்குச் சென்றேன். ஒருவேளை நான் முன் இருந்த அலுவலகத்தில் தொடர்ந்து இருந்தாலும் இப்போது கிடைத்திருக்கிற இந்தச் சம்பளமும், உயர்ந்த பதவியும் கூடக் கிடைத்திருக்காது. அங்கு எனக்கு மேலே அநேக அதிகாரிகள் உண்டு ஆனால் இங்கு நான் மட்டும் தான். எப்படி பூமிக்கு ஒரே சூரியன் ஒரே சந்திரனோ அப்படியே கர்த்தர் இப்போது என்னைப் பணியில் வைத்திருக்கிறார்.

இதை வாசித்துக் கொண்டிருக்கிற உங்களுக்கு நான் சொல்லுவது என்னவென்றால் "அவரைத் தெய்வமாக மட்டுமல்ல சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, பரிசுத்தமாய் எந்த ஒரு பாவத்திற்கும் உங்களை விற்றுபோடாமல், அவரை மட்டும் விசுவாசிக்கும்போது உங்களையும் கர்த்தர் ஆசீர்வதிக்கச் சித்தம் உள்ளவராகவே இருக்கிறார்.

**கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!!!!**

- Raji

**BIBLE IN SCIENCE**

# Dopamine



Dopamine - இது ஒரு வகையான Chemical Substance இத நம்ம மூளை தான் secrete பண்ணுது. நாம் ஒரு காரியத்தை செய்து முடிக்கும் போது நமக்கு இனாமாக (Reward) இந்த dopamine-ஐ secrete பண்ணும். நமக்கு இன்பத்தை, ஆர்வத்தை தூண்டும் காரியங்களை செய்யும் போது அதிக அளவில் dopamine சுரக்கிறது. இதனால் dopamine-ஐ சுரக்க செய்யும் அந்த காரியத்தை திரும்ப திரும்ப செய்ய நம் மூளை நம்மை தூண்டும். Cell phone-ல் social media use பண்ணும் போது, தவறான படங்களை பார்க்கும் போது, மது அருந்தும் போது, புகை பிடிக்கும் போது இந்த dopamine அதிக அளவில் சுரக்கிறது. நாட்கள் செல்ல செல்ல நாம் இதற்கு அடிமையாகி விடுகிறோம். இந்த காரியத்தை தாண்ட முடியாமல் depression-க்கு உள்ளாகிறோம். இதில் இருந்து வெளியே வர dopamine-ஐ அதிகமாய் சுரக்கச் செய்கிற காரியங்களுக்குப் பதிலாக வேதம் வாசிப்பது, ஜெபிப்பது போன்ற habits ஐ develop பண்ணுறது மூலமாய் இந்த அடிமைதனத்திலிருந்து வெளியே வர முடியும்.

"கர்த்தரிடத்தில் பலத்தை கேட்டு முயற்சி செய்யும் போது இந்த பாவத்தை தாண்டிட அவர் உங்களுக்கு உதவி செய்வார்"

- Thrusha





Meeting ID: 766 799 5892
Passcode: 1CRORE

புதிய நாளில் புதிய கிருபைகளை பெற்றிட,
புதிய நாளைத் தந்த கர்த்தரின் பாதத்தில்
அந்நாளை துவங்கிட, நித்தியத்தில் நம்மை
நிலை நிறுத்தும் நித்திய வார்த்தைகளை கேட்டிட
அதிகாலையில் எங்களோடு
இணைந்து கொள்ளுங்கள்...

இயேசுவை அறிந்தவர்களாய்,
தொழுதுகொள்கிறவர்களாய் மாத்திரம் அல்ல,
அவருக்காய் வாழ்ந்திட
அவரைப்போல வாழ்ந்திட,
இயேசுவைப்போல நாமும் உருவாக்கப்பட
மாலையில் எங்களோடு
இணைந்து கொள்ளுங்கள்...






Reg.No. 4/46/2019
Regd.Office :428,7th Middle Street, Thiagarajanagar, Tirunelveli - 627011
Phone: +91 766 799 5892, +91 900 322 4541 Email : info@endtimewarriors.org Web: www.endtimewarriors.in



Follow us on: